செ.வெ.எண்: 53 நாள்: 27.08.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் சிக்கல் ஊராட்சியில் அமைந்துள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் சிக்கல் ஊராட்சியில் அமைந்துள்ள தமிழ்நாடு டாக்டர்.ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கிவரும் வேளாண்மை அறிவியல் நிலையத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (27.08.2021) ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது வேளாண்மை அறிவியல் நிலையத்தில் செயல்பாடுகள், நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், விஞ்ஞானிகள், தொழில்நுட்ப அலுவலர்கள் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் பணிகளை குறித்தும் இந்நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கிப்ட் திலேப்பியா மீன் வளர்ப்புப் பண்ணை, அக்வாபோனிக்ஸ் செயல் விளக்கம், காளான் வளர்ப்பு கூடங்கள், ஆடு, மாடு, கோழி, காடை, வாத்து போன்றவைகள் வளர்ப்பு மற்றும் ஆடு இனப்பெருக்க மையம், அசோலா மற்றும் மண்புழு உரம் உற்பத்தி, தீவனப் பயிர் சாகுபடி, முட்டை பொரிப்பான், ஒருங்கிணைந்த பண்ணை திட்டம், மரக்கன்றுகள், மீன் அமினோ அமிலம் மற்றும் அலங்கார மீன் குஞ்சு உற்பத்தி, மதிப்புக்கூட்டிய மீன் பொருட்கள் தயாரிக்கும் மற்றும் சூரிய சக்தி உலர்த்தி ஆகிய செயல் விளக்க கூடங்கள், பண்ணை மாதிரிகள் மற்றும் இம்மாவட்ட விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ரீதியான பயிற்சிகள், செயல் விளக்கங்கள், ஆலோசனைகள், மண் ஆய்வு போன்றவைகளையும், இதனை தொடர்ந்து வேளாண்மை மற்றும் வேளாண்மைச் சார்ந்த உப தொழில்கள், மாற்றுப்பயிர் திட்டம் செயல்படுத்தும் வழிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் கேட்டறிந்து ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர்.அ.கோபாலக்கண்ணன், மீன்வள விரிவாக்க தொழில்நுட்ப வல்லுநர் திரு. யு.ஹினோ பெர்னாண்டோ, அனைத்து தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**